செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

நாள்: **07.06.2024**

# தென்னகப் பழங்குடி மொழிகளில் பழந்தமிழ்ச் சொற்கள்

**பயிலரங்கம் - 08**

**நாள்: (19.06.2024 - 28.06.2024)**

# Ancient Tamil Words in the Tribal Languages of South India

## அறிவிப்பும் அழைப்பும்

இந்தியப் பழங்குடி மக்களின் மொழிகளைப் பற்றி கடந்த நூற்றாண்டு முதல் பலர் ஆராய்ந்து வருகின்றனர். குறிப்பாகத் தென்னிந்தியப் பழங்குடி மக்களின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கங்கள், திருவிழாக்கள், கலைகள், மருத்துவம், நம்பிக்கைகள், வாழ்வியல் சடங்குகள், மொழியமைப்பு உள்ளிட்ட பல்வேறு கூறுகளை ஆராயும் முயற்சிகள் நடைபெற்றுள்ளன. அந்த ஆய்வுகள் வழியாகப் பல்வேறு பழங்குடி மக்களுக்கிடையில் பல ஒற்றுமைக் கூறுகள் இருப்பது வெளிப்பட்டுள்ளன. தற்போதைய தொழில்நுட்ப வளர்ச்சியினால் பழங்குடி மக்களின் வாழ்க்கைச் சூழலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் மரபுசார்ந்த வாழ்வியல் கூறுகளும் அதுசார்ந்த சொற்களும் வழக்குகளும் மறைந்துபோகின்றன.

தமிழ் மொழியானது தென்னிந்தியாவில் பேசப்படும் மொழிகளுக்கு மட்டுமின்றி இந்திய நிலப்பரப்பிற்கு வெளியே பேசப்படும் **பிராகூய்** போன்ற மொழிகளுக்கும் மூலமாக இருப்பதை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. பல்வேறு மொழியியல் ஆய்வறிஞர்களின் களஆய்வு முயற்சிகளால் தென்னிந்தியப் பழங்குடி மொழிகளாகப் *பெட்டகுறும்பா, முள்ளுகுறும்பா, காணிக்காரன், காட்டுநாயக்கா, கசபா, காடர், பணியா, சோளிகா, ஊராளி, பாலுகுறும்பா, எரவல்லா, கொரகா, இருளா, நரிக்குறவா, கூயி, அடியா மொழி* போன்றவை இனங்காணப்பட்டுள்ளன.

தொன்மை மிக்கத் தமிழ் மொழியின் பழமையான பலசொற்கள் தமிழகப் பழங்குடிச் சமூகத்தில் இன்றும் வழக்கில் இருக்கின்றன. பழங்குடி மக்களின் பண்பாடு, நாட்டுப்புறக் கலைகள் மற்றும் வாழ்வியல் முறைகளில் பண்டைய தமிழ்ச் சொற்கள் வேரூன்றியுள்ளன. பழங்குடிச் சமூகம் சார்ந்த வரலாறு, அரசியல், சமயம், தத்துவம், இயல், இசை, நாடகம்,

கலைகள், ஓவியம், சிற்பம், கட்டடக்கலை, விளையாட்டு, உணவு வகைகள், உடைகள், பொழுதுபோக்குக் கொண்டாட்டங்கள், சடங்குகள் ஆகியவற்றில் வழங்கப்படும் வழக்குச் சொற்களில் பழந்தமிழ் சொற்கள் பல காணப்படுகின்றன. இவற்றைக் கண்டறியும் நோக்கில் இப்பயிலரங்கம் நடைபெறவுள்ளது.

இப்பயிலரங்கில் முனைவர்பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவ/மாணவியர் கலந்துகொண்டு பயன்பெற வேண்டும் என்னும் நோக்கத்திற்காக இப்பயிலரங்கம் நடத்தப்படுகிறது. மொழியியல் அறிஞர்கள், பன்மொழி அறிவுப்புலமைப் பெற்றுள்ள அறிஞர்கள் ஆகியோர் இப்பயிலரங்கில் பயிற்றுவிக்க உள்ளார்கள்.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை - **25**
- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்:**19.06.2024** முதல் **28.06.2024** முடிய பத்து நாட்கள்.
- பயிலரங்கு நேரம்: காலை 10.00 - 1.00 & மாலை 2.00 - 5.00.
- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்கள் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின் படி வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவார் இணையவழி விண்ணப்பத்தை நிறைவு செய்து இணையத்தின் வழி அனுப்பவும்.
- இணையவழி விண்ணப்பம் **https://forms.gle/PHxta9aqE7k7LjEHA** என்ற இணைப்பின் வழியாக அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR-code) மூலமாக கிடைக்கப்பெறும்.

- பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
- பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட்ட வேண்டும்.
- நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் **12.06.2024** காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
- செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **12.06.2024** அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- இப்பயிலரங்கில் பங்கேற்போர் **38** அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்கு தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் தினப்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டது.

**இயக்குநர்**